## தலைப்பு 105 - வெகுசன ஊடக அமைச்சு - 2024

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 105 - வெகுசன ஊடக அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூலை 31 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து வெகுசன ஊடக அமைச்சின் 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலிருந்து நிதி நிலைமை, நிதி செயலாற்றல், காசுப்பாய்ச்சல் என்பன நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I இல் குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 ஒரு வியடத்தினை வலியுறுத்துதல் - நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கின்ற நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு I தொடர்பாக கவனம் செலுத்துகிறேன். நிதிக்கூற்றுக்களானது அரசாங்க நிதிப்பிமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க வெகுசன ஊடக அமைச்சின் பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்காக தயாரிக்கப்பட்டது. அதன் காரணமாக இந்நிதிக் கூற்றுக்கள் ஏனைய நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கையானது வெகுசன ஊடக அமைச்சின் பொது திறைசேரியின் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரசாங்க நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரிவரி 21 ஆந் திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய 06/2024 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் வழிகாட்டிக் கோவைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவைகள் சம்பந்தமாக நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | 02 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட கால வீச்சிற்குள் உரிமை அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள 26 வாகனங்களின் பெறுமதியான ரூபா 385,150,000 (2024 ஆம் ஆண்டில் காப்புறுதி செய்யும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைக்கு இணங்க) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக நிதியற்ற சொத்துக்கள் அப்பெறுமதியால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | வெகுசன ஊடக அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள இதுவரை கணக்கீடு செய்யப்படாத அனைத்து வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) பதிடுேகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பமதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (i) **பிணைப் பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 891(1) இன் பிகராரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப்பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பிணை வைப்பதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றது எனவும் அதற்கிணங்க எதிர்வரும் காலங்களில் பிணைப்பதிவேடு பேணப்படும் எனவும் தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்ட தகவல்கள் உள்ளடக்கப்படும் வகையில் பிணைவைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணை பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ii) **சேதங்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக் கவில்லை. | பதிவேட்டில் காணப்பட்ட குறைபாடுகளை அடையாளங்கண்டு நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் 110 இலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அதன் கீழுள்ள மாதிரிக்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (iii) **பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு** | | |
| நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் பதிவேட்டினை ஆரம்பித்து பேணுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்களை நாளாந்தம் பரீட்சிக்க கூடியவாறு பொறுப்புக்கள் பதிவேட்டில் அப்பொறுப்புக்கள் பதியப்படுதல் வேண்டும். |

**2. ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| இரண்டு தனியார் நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 20 மில்லியன் பணம் 12 ஆண்டுகளுக்கும் 18 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றினை அறவீடு செய்வதற்காக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு நிறுவனத்திற்கு நிலுவைப் பணத்தை செலுத்துமாறு ஒரு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் மற்றைய நிறுவனத்தின் நிலுவைப் பணம் மூன்று தவணைகள் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மிகுதியை செலுத்துமாறு ஞாபகப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் பின்தொடர் நடவடிக்கை எடுத்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்காக தாமதமின்றி உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) வெகுசன ஊடக அமைச்சுக்கு ரூபா 432,500,00 மூலதன தேறிய நிதி ஏற்பாடு காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 185,723,029 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க மூலதனச் செலவில் 57 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | Digitalization of Terrestrial Talevision Broad casting செயற்திட்டம் எதிர்பார்த்த செயல் நடவடிக்கை மட்டத்தினை அடைந்து கொள்ளாமையானது மூலதனச் செலவு சேமிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது. | மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் தமது அமைச்சிற்குரிய வரைபு மதிப்பீடானது நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க தயாரிக்கப்படுகின்றது என்பதன கவனித்துப் பார்ப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். | 2024 ஆம் ஆண்டில் அதிகரித்திருந்த வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் நிறைவேற்றுப் படிகளைச் செலுத்துவதற்கு நிதி ஏற்பாடு கிடைக்காமைை, போக்குவரத்து படிகளை வேண்டிக் கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் முதலிய விடயங்களின் அடிப்படையில் ஒவ்வொரு | மதிப்பீடுகளை சரியாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக நிதி ஏற்பாடு வழங்க்கப்பட்டிருந்த ஒட்டுமொத்தமாக 25 மீண்டுவரும் செலவு விடயங்களில் 04 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 10,810,000 நிதி எற்பாடு ஏனைய 06 மீண்டுவரும் செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்ததனால் நிதிப் பிரமாணங்களின் தேவைப்பாட்டினை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்து நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | செலவு விடயத்திற்காக நி.பி 66 இன் கீழ் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது எனவும் அரசாங்க ஊடக பரிசளிப்பு விழா நடைபெறாமை சூரிய மின்கலம் பயன்படுத்தப்பட்டதன் மூலம் மின்சார செலவுகளை குறைத்தல் ஆகிய விடயங்களுக்கு இணங்க ஒவ்வொரு செலவு விடயத்தில் இடம்பெற்ற நிதி எற்பாடு சேமிப்புக்களானது மேலே குறிப்பிட்ட நிதி ஏற்பாட்டு பற்றாக்குறைகளுக்கு ஈடுபடுத்தப்பட்டது. | |

### 3.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்தல் செய்ய வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அமைச்சின் நிதி கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டியிருந்துதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறமையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வளார் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்கான ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய மீளாய்வு 2024 ஆம் ஆண்டிற்காக மேற்கொண்டு சமர்ப்பிப்பதற்கு முடியாதுள்ளது எனவும் அந்த அறிக்கையியை தாமதமின்றி கணக்காய்வளார் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்கய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

| | | அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | | **பெறுமதி**<br>**ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் நி.பி 880 | - | அரசாங்க உத்தியோத்தர்கள் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணைவைக்க வேண்டிய அமைச்சின் 22 உத்தியோகத்தர்கள் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பிணை வைப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் எதிர்வரும் காலங்களில் பிணைப் பதிவேடு பேணப்படும். | நிதிப்பிரமாணம் மற்றும் உரிய அதிகாரச் சட்டங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க 2009 யூன் 17 ஆந் திகதிய 09/2009(i) ஆம் இலக்க சுற்றறிக்கை | - | அமைச்சு ஆளணியினர் தமது சேவை நிலையத்திற்கு வருகைதரல் மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் அமைச்சரின் ஆளணியிலுள்ள 05 உத்தியோகத்தர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சரின் ஆளணியிலுள்ள | அமைச்சு ஆளணியால் மேலதிக நேரவேலை/ இணைந்தபடி வேண்டுதல்களை சமர்ப்பிக்கையில் அது தனிப்பட்ட செயலாளர்/ ஒருங்கிணைப்பு செயலாளரினால் பரீட்சிக்கப்பட்டு தமது சிபாரிசு சமர்ப்பிக்கப்படுகின்றது எனவும் அதனை அடிப்படையாகக் கொண்டு வருகை தந்துள்ளார் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | 05 உத்தியோகத்தர்களின் 2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2024 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வருகை மற்றும் வெளிச்செல்லலினை பதிவுசெய்வதற்காக ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. வருகையை உறுதிப்படுத்தும் ஒரு பதிவேடு இல்லாது இந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளம், போக்குவரத்துப் படிகள், எரிபொருள் என்பவற்றிற்காக ரூபா 13,941,368 அமச்சினால் செலவு செய்யப்பட்டிருந்தது. | எனவும் தனிப்பட்ட ஆளணியினர் வருகை/ வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துவது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட ஏற்பாடு பற்றி தெரியப்படுத்துதல் இதுவரை காணப்படாததன் காரணமாக மேலே குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இந்த ஐயவினாவின் அடிப்படையில் எதிர்வரும் காலங்களில் வருகை வெளிச் செல்லல் பதிவேட்டினை சமர்ப்பித்தலினை கட்டாயப்படுத்துவதற்கு நவடிக்கை எடுக்கப்படும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மன்றம் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தினை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளுக்காக 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 10.75 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அந்த | இது சம்பந்தமாக பத்திரிகை அறிவித்தலிலிருந்து ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகள் அந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது உரிய நிர்மாணச் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றது | மீளாய்வாண்டின் போது திட்டமிட்ட செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கண்காணிப்புச் செய்யப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் 100 சதவீதமாக காட்டப்பட்டிருந்தது. எனினும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் கட்டிட திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் திணைக்களம் இச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக வெளித்தரப்பினர்களுக்கு 2025 பெப்ரவரி 24 ஆந் திகதியிலிருந்தே அழைப்பு விடுத்திருந்தது. | என தெரிவிக்கப்பட்டது. | வேண்டும்.<br><br>அறிக்கையினை சரியாக பேணுவதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை மன்றத்தின் Wifi வசதிகளை வழங்குதல் மற்றும் ஸ்தாபிப்பதற்காக ரூபா 6.8 மில்லியனுக்கான செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றமும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 100 சதவீதமாக காட்டப்பட்டிருந்தும் அத்திகதி வரையும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை . | மன்றம் நிறுவனத்தினால் செயல்முன்னேற்றத்தினை சமர்ப்பிக்கும் போது சில குறைபாடுகள் இடம்பெற்றுள்ளது எனவும் எதிர்வரும் காலங்களில் இந்நிலைமையை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | மீளாய்வாண்டின் போது திட்டமிட்ட செயற்பாடுகளை நிர்ணயிக்கப்பட்டவாறு நிறைவேற்றுவதற்காக அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் கண்காணிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.<br><br>அறிக்கைகளை சரியாக பேணுவதற்காக அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |

**4.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்கு எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டு பிரதான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஆண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சு அவ்வாறு செய்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணக்கமான வகையில் பெறுகைத் திட்டானது 03 ஆண்டுகளுக்காக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் பாதுகாப்புச சேவையை வழங்கிய கம்பனியின் உடன்படிக்கை காலம் 2023 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்துடன் ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்படாது அக்கம்பனிக்கே ரூபா 368,000 பணம் செலவு செய்து 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து மற்றுமொரு கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் உன்படிக்கைக்கு இணங்க அந்த நிறுவனத்திற்கு ஒரு மாதத்திற்கு உசச அளவாக ரூபா 276,149 பணத்தை செலுத்துவதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முறையான பெறுகை நடைமுறையின் மூலம் நிறுவனம் தெரிவு செய்யப்படாமையின் அடிப்படையில் அமைச்சு ஒரு மாத்திற்கு ரூபா 91,851 வீதம் 06 மாத காலத்திற்கு ரூபா 551,106 மேலதிக செலவினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. . | எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. | உடன்படிக்கை காலம் முடிவடைவதற்கு முன்னர் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க முறைப்படியாக கேள்வி கோருவதன் மூலம் ஒரு நிறுவனம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். |

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 32-8985 ஆம் இலக்க பஜ்ரோ வாகனம் 2022 சனவரி 26 ஆந் திகதி வெகுசன ஊடக அமைச்சிற்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் உரிய வாகனத்தின் முதலாவது உரிமையாளரினால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 180,000 நிலுவையான அனுமதிப்பத்திர கட்டண பெறுமதியின் காரணமாக வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் | இந்த வாகனத்தை திருத்தம் செய்து ஓடுவதற்கு ஆயத்தப்படுத்தி வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது அதன் தொடக்க உரிமையாளர் செலுத்த வேண்டிய ரூபா 185,117 நிலுவையான வருமான அனுமதிப்பத்திர கட்டணம் உள்ளது என மேல் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து | சொத்துக்களை முறைப்படியாக பயன்படுத்துவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக உரிய வாகனம் பொறுப்பேற்ற திகதியிலிருந்து ஓடுவதற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | ஆணையாளரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும் அந்த நிலுவையான வருமான அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் தண்டப் பணத்தையும் குறைப்பதற்கு மேல் மாகாண பிரதம செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது எனவும் வருமான அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்குச் செல்லும் போது உருவாகிய இந்த நடைமுறைப் பிரச்சினை தொடர்பாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | அமைச்சின் போக்குவரத்து செயற்பாடுகளுக்காக அமைச்சிற்கு உரிமை ஒப்படைக்கப்பட்ட மற்றும் உரிமை ஒப்படைக்கப்படாத வாகனங்கள் உள்ளடங்கலாக 29 வாகனங்கள் காணப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டின் போது 19 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறு காணப்பட்டிருந்தும் குத்தகை முறைமையில் 02 வாகனங்கள் ரூபா 33 மில்லியனுக்கு 05 ஆண்டுகள் காலப்பகுதிக்கான செயற்பாட்டு குத்தகை முறைமையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் இந்த 02 வாகனங்களுக்காக 2024 ஆம் ஆண்டில் மாத்திரம் ரூபா 8,227,326 செலவு செய்யப்பட்டிருந்தது. | அமைச்சிடம் உள்ள வாகனங்கள் பொதுவாக 10 ஆண்டுகளை மிகைத்தவையாக இருப்பதனால் அடிக்கடி திருத்தம் செய்வதற்கு அனுப்பவைப்பதற்கான போக்கு அதிகரித்து காணப்படுகின்றது எனவும் அமைச்சின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகைமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு இணைத்துக்கொள்வதற்கு பொருத்தமான வாகனம் இல்லாததனால் அப்போது அந்த வாகனத் தேவைபாபட்டினை நிறைவேற்றியிருந்த முறைமையில் 07/2022 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க 2023 சனவரி 02 ஆந் திகதி கெம்ப்ட்ரோலர் ஜெனரால் அவர்களின் | அரசாங்கத்தின் செலவுகளை குறைக்கும் வகையில் முறையான முகாமைத்துவத்துடன் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சுற்றிற்ககை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறையான அங்கீகாரத்தினைப் பெற்று செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் இரண்டு வாகனங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் மூலம் நிதி எற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (இ) | அமைச்சிற்கு முறையாக உரிமை ஒப்படைக்கப்படாத மற்றும் மதிப்பீடு செய்யப்படாத ஒரு வாகனத்தை ரூபா 2,500,000 இற்கு கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வாகனத்தை கைதவிர்ப்புச் செய்வதன் மூலம் பெற்ற பணம் கொம்பட் ரோலர் ஜெனரால் அவர்களின் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தராக செயற்படுகின்ற 2006-02-01 ஆம் வருமான குறியீட்டு இலக்கத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரியான நடைமுறைக்கு இணங்க சொத்துக்கள் கைதவிர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும். |

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

இது சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பொதுச் செயற்பாட்டு கட்டுப்பாட்டுச் சபை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 6,581,432 பெறுமதிக்கு கொள்வனவு செய்த டீ.சீ.பீ இயந்திரம் 2019 ஆம் ஆண்டிலிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்படாதிருந்ததனால் கல்வி அமைச்சின் மூலம் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 56,500,000 பெறுமதியான திரையரங்கினை இன்றுவரை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. இதற்கிணங்க இநத இயந்திரத்தினை செயற்படும் நிலைக்கு மாற்றாததன் மூலம் சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 14,765,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | 2025 மதிப்பீட்டில் நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்காக பொதுச் செயற்பாட்டு கட்டுப்பாட்டுச் சபையின் தற்போதைய வரிசை அமைச்சினால் முழுமையான ஒரு அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | இயந்திரத்தினை பராமரிக்கும் நடவடிக்கையினை தாமதமின்றி மேற்கொள்வதன் மூலம் ஏற்படுகின்ற நட்டத்தை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ரூபா 14,000,000 பெறுமதியான போக்குவரத்து சிவில் விமான சேவைகள் நிறுவனத்திற்குச் சொந்தமான KY-3328 ஆம் இலக்க டியானா நிசான் வாகனத்திற்காக வெகுசன ஊடக அமைச்சு 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 3,042,848 திருத்தம் செய்தல் செலவினை மேற்கொண்டிருந்ததுடன் இது அந்த ஆண்டில் அமைச்சின் ஒட்டுமொத்த திருத்தம் செய்தல் செலவில் 54 சதவீதமாகும். இவ்வாறான அதிக அளவு பெறுமதியைக் கொண்ட வாகனத்தை பயன்படுத்துதல் மற்றும் பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவு 2024 சனவரி 10 ஆந் திகதிய 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணக்க மற்றவை என அவதானிக்கப்பட்டது. | உத்தியோகத்தர்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள அரசாங்கத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ வாகனம் என்பதனால் திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்டுள்ளது எனவும் 01/2024 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க மாதாந்த வாடகை/ செயற்பாட்டு குத்தகையின் அடிப்படையில் வாகனத்தை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு உள்ள போதிலும் இன்றுவரை 02 வாகனங்கள் அந்த முறைமையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தனால் மேலும் இவ்வாறு வாகனங்களையும் பெற்றுக்கொள்ளாது இந்த வாகனங்களை திருத்தம் செய்து ஓடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. | 01/2024 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிலப்பரப்பு தொலைக்காட்சி ஒலிபரப்பு டிஜிடல் மயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக 2021 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரை முறையே 105-02-04-08-2509-12 ஆம் இலக்க 105-02-04-08-2509-17 ஆம் இலகக செலவு விடயங்களின் கீழும் 2025 ஆம் ஆண்டில் 111-02-28-004-2509-17 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழும் கணக்காய்வுத் திகதியான 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை ரூபா 32.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் இச்செலவில் 99 சதவீதத்திற்கு மேற்பட்ட பகுதி சம்பளம் மற்றும் கூலிக்காக செலவு செய்யப்பட்டிருந்தும் எதிர்பார்த்தவாறு செய்றபாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | JICA கடன் உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற இச்செயற்திட்டம் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2022 ஏப்ரல் மாத்தில் அப்போது நாட்டில் காணப்பட்ட பாதகமான பொருளாதார நிலைமையின் அடிப்படையில் ஜப்பான் அரசாங்கத்தினால் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டத்திற்காக பணம் அனுப்புதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதனால் செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை உத்தேசிக்கப்பட்டவாறு மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது எனவும் இச்செயற்திட்டத்தின் | எதிர்பார்த்தவாறு செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான இரண்டு நபரகளைக் கொண்ட ஆகக் குறைந்த ஆளணியினரின் கீழ் அமுல்ப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது எனவும் 2025 மே மாதம் 14 ஆந் திகதி JICA நிறுவனம் உரிய உடன்படிக்கைக்காக இணக்கப்பாட்டினை வழங்கியுள்ளது எனவும் அதற்கிணங்க இச்செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

**4.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| தலைப்பு 105- வெகுசன ஊடக அமைச்சின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 5,643,580 ஆன மோட்டார் வாகனங்களை திருத்தம் செய்யும் செலவில் ரூபா 3,042,848 ஆனது சிவில் விமான சேவைகள் அமைச்சின் வாகனங்களை திருத்தம் செய்வதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | இந்த வாகனம் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வெகுசன ஊடக பிரிவினால் பெறுப்பேற்பதற்கு தேவையான அங்கீகாரம் தற்பொழுது கிடைத்துள்ளது எனவும் வெகுசன ஊடகப் பிரிவில் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்தின் ஒரு வாகனமாக ஓடும் நிலையில் பேணுவதனை முன்னிட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | அமைச்சிற்கு உரிமையுள்ளதாக காணப்படுகின்ற வாகனத்தை பராமரிப்பதற்காக மாத்திரம் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்துதல் வேண்டும். |